




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 323 | 4 Pages | 18.6.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 323 | 4 பக்கங்கள் | 18.6.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்**

**விளக்கம்:**

**முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.**

# டெல்லி மதராசி கேம்ப் பாதிக்கப்பட்ட தமிழர்களின் குடும்பங்களுக்கு ரூ.50 லட்சம் நிதியுதவி: முதல்வர்

சென்னை, ஜூன் 18

டெல்லியில், மதராசி கேம்ப் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் முதல்அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

டெல்லி, ஜங்புரா பகுதியில், மதராசி கேம்ப் எனப்படும் குடிசைப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் இடித்து அகற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை ஈடுக்குமாறு வலியுறுத்தி டெல்லி முதல்மந்திரி ரேகா குப்தாவுக்கு, தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தினை கடந்த 1062025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர், டெல்லி முதல்மந்திரி ரேகா குப்தா அவர்களை நேரில் சந்தித்து வழங்கியதோடு, கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தினர்.

முதல்அமைச்சர் எழுதியிருந்த கடிதத்தில், பாதிக்கப்பட்ட 370 தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பின்வரும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டெல்லி முதல்மந்திரி அவர்களை தனது கடிதத்தில் கோரியிருந்தார்:

★ பொருளாதாரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) அடுக்குமாடிக் குடியிருப்புகளை முழுமையாகப் பூர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட உரிமைபெற்ற189குடும்பங்களுக்கு வழங்கிடவும், விரைவான சமூக உள்கட்டமைப்பு மற்றும் பிரத்யேகமான போக்குவரத்து சேலைகளை வழங்கிடவும் வேண்டும்.

★ மீதமுள்ள 181 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வருமான உச்சவரம்பு, குடியிருப்புத் தேவைகள் மற்றும் வைப்புத்தொகை நிபந்தனைகளில் சிறப்புத் தளர்வுகளை வழங்கி, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) வீடுகளைப் பெறுவதற்கான தகுதியை விரிவுபடுத்திட வேண்டும்.

★ G7ல் தற்காலிக டெல்லி தமிழ்க் கல்விச் சங்கத்தின் (Delhi Tamil Education AssociationDTEA) பள்ளியை அனுமதிப்பதன் மூலம் தற்காலிக தமிழ் வழிப் பள்ளியை நிறுவுதல், உடனடி சேர்க்கை மற்றும் சிறப்புப் போக்குவரத்து வசதிகளுடன் அல்லது நிரந்தர வசதிகள் தயாராகும் வரை ஒதுக்கப்பட்ட இருக்கைகள் மற்றும் இடைக்கால போக்குவரத்து வசதியுடன் அருகிலுள்ள டெல்லி மாநகராட்சிப் பள்ளியில் தமிழ் பயிற்றுவிப்பை அங்கீகரித்தல் போன்றவற்றைச் செய்திட வேண்டும்.

★ இடம்பெயர்ந்த பெண்களுக்கு இலக்குடன் கூடிய தொழில் பயிற்சி மற்றும் குறு நிறுவன மானியங்கள் மூலம் வாழ்வாதார ஆதரவைத்திரட்டிட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், டெல்லி நிர்வாகம் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகி, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க மேற்குறிப்பிட்ட நவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், இடம் பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் சுமூகமான, கண்ணியமான மறுவாழ்வை உறுதி செய்வதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு அரசு உதவத் தயாராக இருப்பதாகவும் தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.



இந்நிலையில், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் ஊழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒருமுறைநிதியுதவியாகதலா 8 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் அரிசி,

கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கிடவும் ஏதுவாக, இன்று (1662025) முதல்அமை ச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண நிகழ்ச்சியில் பங்கேற்று திரும்பியபோது சோகம்.. லாரி மோதியதில் பலியான நடன கலைஞர்கள்




நெலமங்களா, ஜூன் 18

கர்நாடகாமாநிலம் பெங்களூருசிவராமபுராவை சேர்ந்தவர்பிரஜ்வல் (வயது 22). அதே பகுதியில் வசித்து வந்தவர் சகானா (21). இவர்கள் 2 பேரும் நடன கலைஞர்கள் ஆவார்கள். பிரஜ்வல் மற்றும் சகானா சில சினிமா படங்களில் இடம் பெற்றுள்ள பாடல்களுக்கு நடனமாடி உள்ளனர். இதுதவிர திருமணம், திருவிழாக்கள், சுப நிகழ்ச்சிகளிலும் 2 பேரும் நடனமாடி வந்தார்கள். அதன்படி, துமகூரு மாவட்டம் குனிகல்லில் நடந்த திருமண நிகழ்ச்சியில் பங்கேற்று விட்டு நேற்று முன்தினம் இரவு பிரஜ்வல், சகானா ஆகியோர் மோட்டார் சைக்கிளில் பெங்களூருவுக்குபுறப்பட்டனர்.இரவு11.30மணியளவில்பெங்களூரு புறநகர் மாவட்டம் நெலமங்களா அருகே பெங்களூருகுனிகல் தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது அதே சாலையில் வந்த லாரி அவர்களது மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதனால் மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட பிரஜ்வல், சகானா ஆகியோர் பலத்தகாயம் அடைந்து பரிதாபமாக உயிரிழந்தனர். தகவல் அறிந்ததும் நெலமங்களா போக்குவரத்து போலீசார் விரைந்து வந்து 2 பேரின் உடல்களையும் கைப்பற்றி விசாரித்தனர். அப்போது லாரியை டிரைவர் கவனக்குறைவாகவும், வேகமாகவும் ஓட்டியதே விபத்திற்கு காரணம் என்று தெரியவந்தது. இதுகுறித்து நெலமங்களா போக்குவரத்து போலீசார் வழக்குப்பதிவு செய்து லாரி டிரைவரை கைது செய்தனர். மேலும் லாரியையும் போலீசார் பறிமுதல் செய்தார்கள்.

## கடற்கரைக்கு காதலனுடன் வந்த கல்லூரி மாணவி.. 10 பேர் கும்பல் செய்த வெறிச்செயல்



புவனேஸ்வர், ஜூன் 18

ஒடிசா மாநிலம் பெர்ஹம்பூரில் உள்ள கோபால்பூர் கடற்கரை சுற்றுலா தலமாக விளங்குகிறது. தற்போது, அங்குநடந்துவரும்உள்ளூர் பண்டிகையையொட்டி அதிகளவில் மக்கள் கடற்கரைக்கு வந்து செல்கிறார்கள்.

இந்தநிலையில், அங்கு தங்கி படித்து வரும் கல்லூரி மாணவி ஒருவரும் தன்னுடன் அதே கல்லூரியில் படிக்கும் தனது காதலனுடன் நேற்றுமுன்தினம் இரவு கடற்கரைக்கு சென்றார். இருவரும் தனிமையான இடத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் அங்கு 10 பேர் கும்பல் வந்தனர்.


திடீரென அவர்கள் மாணவியின் காதலனை பிடித்து வைத்துக்கொண்டு,மாணவியைஆள்நடமாட்டம்இல்லாதஇடத்திற்கு தூக்கிச்சென்று கற்பழித்துவிட்டு ஓடிவிட்டனர்.

இந்த சம்பவத்தால் அதிர்ச்சி அடைந்த மாணவியும், அவரது காதலனும் கோபால்பூர்போலீஸ்நிலையம் சென்று புகார்கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, இந்த சம்பவத்தில் தொடர்புடைய 7 பேரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் யாரும் உள்ளூரைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பது தெரியவந்தது. மற்ற 3 பேரையும் தேடி வருகின்றனர். கடற்கரைக்கு காதலனுடன் சென்ற கல்லூரி மாணவி 10 பேர் கும்பலால் கற்பழிக்கப்பட்ட சம்பவம் ஒடிசாவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் அம்மாநில உள்துறை வெளியிட்ட குற்றங்கள் குறித்த வெள்ளை அறிக்கையின்படி, 2023ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024ம் ஆண்டு ஒடிசாவில் பாலியல் வன்கொடுமை வழக்குகளின் எண்ணிக்கை 8 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொழில்நுட்பகோளாறு: டெல்லிக்கு திருப்பிவிடப்பட்ட விமானம்



புதுடெல்லி, ஜூன் 18

டெல்லியில் இருந்து ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சிக்கு மாலை 6:20 மணிக்கு பிர்சா முண்டா விமான நிலையத்தில் தரையிறங்க வேண்டிய ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் டெல்லிக்குத் திருப்பி விடப்பட்டது.

ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தில் தொழில்நுட்ப சிக்கல் என்ற சந்தேகத்தால் மீண்டும் திரும்பியதாக கூறப்படுகிறது.

உரிய ஆய்வுக்கு பின் விமானம் மீண்டும் ராஞ்சிக்கு புறப்பட்டு சென்றதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

## கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு அம்மையப்பனில் மாபெரும் இலவச மருத்துவ முகாம்

திருவாரூர் மண்ணின் மைந்தன் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் 102வதுபிறந்த நாளை முன்னிட்டும் ,(லேட்) ஏழுமலை (எ) சுப்ரமணியத்தேவர் மனைவியும், ஏழுமலை ரவி அவர்களின் தாயாருமானநினைவில் வாழும் விஜயா அம்மாள் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சியை முன்னிட்டும், துளிர் மருத்துவமனை திருவாரூர், அகர்வால் கண் மருத்துவமனை தஞ்சாவூர், சிவா கிளினிக்கல் லேப் மெடிக்கல் & ஆப்டிகல்ஸ், அம்மையப்பன் இணைந்து நடத்திய மாபெரும் இலவச மருத்துவ முகாம் இனிதே நடைபெற்றது. அம்மையப்பன் சிவா கிளினிக்கல் லேப் உரிமையாளர் பாலசுந்தரம் அனைவரையும் வரவேற்றார். துளிர் மருத்துவமனையை சேர்ந்த மருத்துவர் செல்வகணபதி M.D முகாமிற்கு தலைமை தாங்கினார். ராய் டிரஸ்ட் இன்டர்நேஷனல் மற்றும் ரிச் பல்கலை கழக நிறுவனத் தலைவர் முனைவர் துரை ராயப்பன் முன்னிலை வகித்து, இரத்த தானம் விழிப்புணர்வு செய்தார். உதவும் கரங்கள் அறக்கட்டளை நிறுவனர் பேராசிரியர் ஏழுமலை முதலுதவி பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி பேசினார். முகாமில் கீழ்கண்ட பரிசோதனைகள் இலவசமாக பரிசோதனை செய்யப்பட்டது . இரத்த அழுத்தம்,ஆக்சிஜன் அளவு,உடல் வெப்ப நிலை, இரத்தத்தில் சர்க்கரை அளவு, பிளிரூபின். கண்பார்வை பரிசோதனை,காது கேட்கும் திறன்,சிறுநீர் தொற்று பரிசோதனை,உடல் பருமன் பரிசோதனை மற்றும் உடல் கொழுப்பு பரிசோதனை, இலவச மருத்துவ ஆலோசனை, இருதய சுருள் படம் (இ.சி.ஜி) போன்ற இலவச பரிசோதனை செய்யப்பட்டு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது நோய் கண்டறியபட்டவர்களுக்கு மேல் கிசிச்சைக்காக இலவசமாக துளிர் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. சிவா கிளினிக் லேப்மருத்துவர். பா.அகிலா, துளிர் மருத்துவமனை மருத்துவர் இப்ராஹிம், மருத்துவர் வைஷாலி தர்மலிங்கம் மற்றும் மருத்துவ ஊழியர்கள் பிரபா, ஸ்ருதி, உஷா ஆகியோர் முழு உடல் மருத்துவ பரிசோதனை மேற்க் கொண்டனர். சிவா கிளினிக்கல் லேப் பாலசுந்தரம் தன்னார்வலர்கள் அருண் பிரகாஷ் , பரணி, சத்யஸ்ரீ ஆகியோர் இரத்தப் பரிசோதனை மற்றும் இ.சி.ஜி பரிசோதனை செய்தனர்.



சிவா ஆப்டிக்கல்ஸ் கண் பரிசோதகர் சிவசங்கர், அகர்வால் கண் மருத்துவமனை செய்தி தொடர்பாளர் மணிகண்டன் அகர்வால் மருத்துவமனை கண் பரிசோதகர்கள் சந்தோஷ், சாலமன் ஆகியோர் கண் குறைபாடு உள்ளவர்களுக்கு கண் முழு பரிசோதனை செய்து கண்ணாடி வழங்கினர்.ஹியர் சாப் நிறுவனத்தின் எம்.ஆர்.எம் ஆடியோலஜி லேப் ஊழியர்கள் டேனிஷ் ரஹ்மான் மற்றும் ஆஷிகா ஆகியோர் செவித்திறன் பரிசோதனை செய்தனர் . சிப்லா நிறுவனத்தின் பரிசோதனையாளர்பி ரித்திவி ராஜ் நுரையீரல் செயல்பாடு பரிசோதனை செய்தார். இந்த முகாமில் 200க்கும் மேற்பட்ட பயனாளிகள் பரிசோதனைகளை முற்றிலும் இலவசமாக .செய்து பயனடைந்தனர். இறுதியில் ஏழுமலை ரவி நன்றி கூற முகாம் இனிதே நிறைவு பெற்றது.

## 170 ஆதரவற்ற சடலங்கள் சொந்த செலவில் அடக்கம்: கார் டிரைவருக்கு குவியும் பாராட்டு



கும்பகோணம், ஜூன் 18

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள கொட்டையூரை சேர்ந்தவர் வெங்கடேசன்(46). வாடகை கார் டிரைவர். இவரின் வருமானம் குறைவாக இருந்தாலும் தினசரி தன்னால் முடிந்த அளவுக்கு ஆதரவற்றோர்களுக்கு உணவு வழங்கி வருகிறார்.மேலும்அப்பகுதிகளில்இறக்கும் ஆதரவற்றோரின் உடல்களை காவல் துறை அனுமதியுடன் சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு தனது சொந்த செலவில் நல்லடக்கம் செய்து வருகிறார்.

இந்நிலையில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் ஆதரவற்று இறந்த ஒருவரது உடலை கிழக்கு போலீசார் அனுமதியுடன், போலீஸ்காரர் புகழேந்திரன் முன்னிலையில் டிரைவர் வெங்கடேசன் நேற்று நல்லடக்கம் செய்தார். இது அவர் அடக்கம் செய்த 170வது சடலமாகும். உறவுகள் இறந்தாலே கண்டுகொள்ளாதவர்கள் மத்தியில் வெங்கடேசனின் மனித நேயத்தை பலரும் பாராட்டி வருகின்றனர். இவருக்கு மனைவி, ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். உதவும் கருணை கரங்கள் அமைப்பு மூலம் இந்த சேவையை அவர் செய்து வருகிறார்.




# சென்னை எழும்பூரில் மதிமுக தலைமை அலுவலகத்தின் மீது அடையாளம் தெரியாத நபர் கல்வீசி தாக்குதல்

சென்னை, ஜூன் 18

சென்னை எழும்பூரில் மதிமுக தலைமை அலுவலகத்தின் மீது அடையாளம் தெரியாத நபர் கல்வீசி தாக்குதல் நடத்தினர். மதிமுக அலுவலகம் உள்ளே சென்று தாக்குதல் நடத்திய நபர்குறித்து கட்சி நிர்வாகம் சார்பில் போலீசில் புகார் அளித்துள்ளது. மதிமுக அலுவலகத்தின் உள்ளே இருந்த மின்விசிறி உள்ளிட்டவற்றை மர்ம நபர் சேதப்படுத்தியதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தீயணைப்புத்துறை சீருடையில் வந்து தாக்குதல் நடத்தியதால், தீயணைப்புத்துறையில் உள்ளாரா என போலீஸ் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# லோடு வேன் கவிழ்ந்து 1 டன் தக்காளி சேதம்

மணப்பாறை, ஜூன்18

பெங்களூருவிலிருந்து 1 டன் தக்காளி ஏற்றிக்கொண்டு வேன் நேற்று மாலை திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி நோக்கி சென்றது. வேனை கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரி பட்டினம் ஆதிதிராவிடர் தெருவை சேர்ந்த செந்தில் குமார்(40) ஓட்டினார். புத்தாநத்தம் அருகே மணப்பாறைதுவரங்குறிச்சி நான்கு வழிச்சாலையில் வந்த போது கட்டுப்பாட்டை இழந்த வேன் திடீரென சாலையில் கவிழ்ந்தது.



இதில் வேன்பெட்டிகளிலிருந்த தக்காளிகள் சாலையில் கொட்டி சிதறின. பின்னர் வேன் அப்புறப்படுத்தப்பட்டது. அந்த வழியாக வந்த பொதுமக்கள் சாலையில் கிடந்த தக்காளிகளை பையில் அள்ளிச் சென்றனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# சேரன்மகாதேவியில் துணிகரம்: கோயில் கதவை உடைத்து கொள்ளை முயற்சி

வீரவநல்லூர், ஜூன் 18

சேரன்மகாதேவி தாமிரபரணி நதிக்கரையில் ஆவுடையம்மன்சமேத அம்மைநாதர் கோவில் உள்ளது. நவகைலாய ஸ்தலத்தில் இரண்டாவது ஸ்தலமான இங்கு நேற்று இரவு கோவிலின் கதவை உடைத்து மர்மநபர்கள் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மெயின் கதவின் தாழ்பாளை கடப்பாறை மூலம் உடைத்தெடுத்த கொள்ளையர்கள்கோயில் உள்ளே நுழைய முயற்சி செய்யும்போது கதவின் உள்புறம் அமைக்கப்பட்டுள்ள அடித்தாழ்ப்பாள் ஆட்டோமேட்டிக்காக லாக் ஆகி உள்ளது.



இதனையடுத்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இந்நிலையில் வழக்கம் போல் கோயிலுக்கு வந்த அர்ச்சகர் கோயில் கதவில் தாழ்ப்பாள் உடைக்கப்பட்டு இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து கோயில் அதிகாரிகள் மற்றும் போலீசுக்கு தகவல் தெரிவித்தார். இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற சேரன்மகாதேவி போலீசார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# காதல் திருமண பிரச்னையில் வாலிபரை கடத்திய விவகாரம் தமிழக போலீஸ் ஏடிஜிபி கைது: சென்னை ஐகோர்ட் அதிரடி உத்தரவு

சென்னை, ஜூன் 18

காதல் திருமண பிரச்னையில் வாலிபரை கடத்திய வழக்கில் உடந்தையாக செயல்பட்ட ஏடிஜிபி உயர் நீதிமன்ற உத்தரவின்படி கைது செய்யப்பட்டார். மேலும், காவல்துறையினர் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி புரட்சி பாரதம் கட்சி தலைவரும் எம்.எல்.ஏவுமான ஜெகன் மூர்த்திக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அதைத் தொடர்ந்து ஜெயராம் கைது செய்யப்பட்டார். ருவள்ளூர் மாவட்டம் களாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த தனுஷ் என்ற இளைஞர், இன்ஸ்டாகிராம் மூலம் தேனியைச் சேர்ந்த விஜய□ என்ற பெண்ணை காதலித்து பதிவுத் திருமணம் செய்துள்ளார். திருமணத்துக்கு விஜய□ பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்து, பெண்ணை தேடி தனுஷ் வீட்டுக்கு சென்றுள்ளனர். அங்கு அவர் இல்லாததால், தனுஷின் சகோதரரை கடத்திச் சென்று பின்னர் இரவு பேருந்து நிறுத்தம் ஒன்றில் இறக்கி விட்டுச் சென்றுள்ளனர். இது தொடர்பாக தனுஷின் தாயார் அளித்த புகாரின் அடிப்படையில், புரட்சி பாரதம் கட்சி தலைவரும், கே.வி.குப்பம் தொகுதி எம்.எல்.ஏவுமான ஜெகன் மூர்த்தி உள்ளிட்டோருக்கு எதிராக வழக்கு பதிவு செய்த போலீசார் பெண்ணின் தந்தை உள்பட 5 பேரை கைது செய்தனர்.

இந்த நிலையில், தன்னை காவல் துறையினர் கைது செய்யக் கூடும் என கூறி, முன் ஜாமீன் கோரி ஜெகன் மூர்த்தி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு, நீதிபதி பி.வேல்முருகன் முன்பு நேற்று காலை விசாரணைக்கு வந்தபோது, ஜெகன்மூர்த்தி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரபாகரன், இந்த கடத்தல் வழக்கில் மனுதாரருக்கு எந்த தொடர்பும் இல்லை. ஒரு கட்சியின் தலைவராகவும் எம்.எல்.ஏ.வாகவும் உள்ள ஜெகன்மூர்த்தியை கைது செய்ய வஜ்ரா வாகனம், 200 போலீசார் திரண்டதால் அந்த பகுதிகளில் அசாதாரண சூழல் நிலவுகிறது என்று வாதிட்டார். காவல் துறை தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் தாமோதரன், வழக்கில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் புரட்சி பாரதம் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர் சரத்குமார் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் ஜெகன்மூர்த்தியின் பங்கு குறித்து குறிப்பிட்டிருக்கிறார். கடத்தப்பட்ட வாலிபர், ஏ.டி.ஜி.பி. ஜெயராமின் காரில் திரும்ப கொண்டு வந்து விடப்பட்டிருக்கிறார். இந்த கடத்தலுக்கும் ஏடிஜிபிக்கும் உள்ள தொடர்பு குறித்து ஜெகன் மூர்த்தியை கைது செய்து விசாரிக்க வேண்டியுள்ளது. கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் இருந்து 7 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.



இதையடுத்து, இந்த வழக்கு தொடர்பாக நேற்று பிற்பகல் நேரில் ஆஜராகுமாறு ஜெகன்மூர்த்திக்கும், ஏடிஜிபி ஜெயராமனுக்கும் நீதிபதி வேல்முருகன் உத்தரவிட்டார். ஆஜராக முன்வராவிட்டால் ஏடிஜிபியை கைது செய்து ஆஜர்படுத்தவும் போலீசாருக்கு உத்தரவிட்ட நீதிபதி, விசாரணையை பிற்பகல் தள்ளிவைத்தார். வழக்கு பிற்பகல் விசாரணைக்கு வந்தபோது, புரட்சி பாரதம் கட்சி தலைவர் ஜெகன் மூர்த்தி, ஏடிஜிபி ஜெயராமன் ஆகியோர் நீதிபதி பி.வேல்முருகன் முன்பு நேரில் ஆஜராகினர். அப்போது, ஜெகன் மூர்த்தி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் எஸ்.பிரபாகரன், கூலிப்படையினர் யாரும் கடத்தலில் ஈடுபடுத்தப்படவில்லை. கூலிப்படையினரை ஈடுபடுத்தியதாக காவல் துறை கூறுவது தவறு என்று வாதிட்டார். வல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் தாமோதரன் ஆஜராகி, வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சரத்குமார், டேவிட், வனராஜ் உள்ளிட்டோர் தனுஷ் வீட்டுக்கு சென்று அவரது சகோதரரை கடத்தியுள்ளனர். அவரை அருகில் இருக்கும் ஓட்டலுக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக ஜெகன் மூர்த்தியிடம் ஏடிஜிபி பேசியிருக்கிறார், இதுசம்பந்தமாக வழக்கறிஞர் சரத்குமார், முன்னாள் காவல் அதிகாரி மகேஸ்வரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளனர் என்று வாதிட்டார்.

இதையடுத்து, நீதிபதி, எந்த தொகுதி எம்.எல்.ஏ. நீங்கள், எத்தனை வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றீர்கள் என்று ஜெகன் மூர்த்தியிடம் கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த ஜெகன் மூர்த்தி, கே.வி.குப்பம் தொகுதியில் இருந்து 70 ஆயிரம் வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக தெரிவித்தார். இதைக் கேட்ட நீதிபதி, 70 ஆயிரம் பேர், அவர்களின் குரலாக சட்டமன்றத்தில் பேச தான் வாக்களித்தனர். ஆனால், அதை மறந்து கட்டப் பஞ்சாயத்து நடத்தி உள்ளீர்கள். கட்டபஞ்சாயத்து செய்யத்தான் மக்கள் வாக்களித்தார்களா? எம்.எல்.ஏ. என்ற போர்வையை பயன்படுத்தி, பதவியை துஷ்பிரயோகம் செய்ய கூடாது. போலீசாரை தடுக்கும் வகையில் ஆட்களை சேர்த்து செயல்பட்டால் வேறு மாதிரி நடவடிக்கை எடுக்கப்படும். உங்களுக்கு வாக்களித்த மக்களுக்காக தான் உங்களை கைது செய்ய உத்தரவிடவில்லை. தவறு செய்யவில்லை என்றால் எதற்காக இரண்டாயிரம் பேரை சேர்த்து காவல்துறை விசாரணையை தடுத்தீர்கள்? நீதிமன்றம் இதை வேடிக்கை பார்க்காது.

இனி இது போன்று நடந்தால் காவல் விசாரணையை தடுக்கும் அனைவரையும் கைது செய்ய உத்தரவிட நேரிடும். உங்களை நம்பி வாக்களித்தவர்கள் மீதுள்ள மரியாதை நிமித்தமாக இது வரை உங்களை கைது செய்ய உத்தரவிடாமல் இருக்கிறேன். இல்லையென்றால் கட்சி மீது கூட நடவடிக்கை எடுக்க உத்தரவிட முடியும்.

எதற்காக நேற்று நூற்றுக்கணக்கானவர்களை என் வீட்டு வாசலிலும் நீதிமன்றத்திற்குள்ளும் அழைத்து வருகிறார்கள்? இதற்கெல்லாம் பயப்பட மாட்டேன். மக்கள் பிரச்சினையை சட்டரீதியாகவோ, சட்ட மன்றம் மூலமாகவோ நீங்கள் தீர்க்க வேண்டும். கட்டப் பஞ்சாயத்து மூலமாக அல்ல. விசாரணைக்கு செல்லுங்க. கூட யாரும் போக கூடாது. யாராவது கூட சென்றால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள். விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் அடுத்து என்ன நடக்கும் என்று உங்களுக்கு தெரியும். விசாரணையின் போது கைது செய்ய கூடாது என்று உத்தரவிட முடியாது. முன் ஜாமீன் மனு மீதான விசாரணையை ஜூன் 26ம் தேதிக்கு தள்ளி வைக்கிறேன் என்று உத்தரவிட்டார்.

இதையடுத்து, ஜெகன்மூர்த்தியை சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு அவரது வழக்கறிஞர்கள் அழைத்து சென்றனர்.

வழக்கில் கைது செய்யப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், ஏடிஜிபி ஜெயராமை ஏன் கைது செய்யவில்லை. எம்.எல்.ஏ.வையும், ஏடிஜிபியையும் சமமாக கருத முடியாது. வாக்களித்த மக்களுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் விசாரணைக்கு எம்.எல்.ஏ. ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். அரசு ஊழியருக்கு சலுகை வழங்க முடியாது. தவறு செய்யும் அதிகாரிகளுக்கு இது ஒரு செய்தியாகும். ஏடிஜிபிக்கு இந்த குற்றத்தில் தொடர்புள்ளதற்கான ஆதாரத்தை அரசு தரப்பு தாக்கல் செய்துள்ளது. கைதான இருவரின் வாக்குமூலத்தில் ஏடிஜிபிக்கும் தொடர்புள்ளது தெரியவந்துள்ளது. அவரை கைது செய்து விசாரணை நடத்துங்கள். அவர் ஜாமீன் கேட்டு கீழமை நீதிமன்றத்திற்கு செல்லட்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

இதையடுத்து, உயர் நீதிமன்ற போலீசார் ஏடிஜிபி ஜெயராமை போலீஸ் ஜீப்பில் அழைத்து சென்றனர். ஜெயராம் நீதிமன்றம் வரும்போது அதிகாரிக்கான காரில் வந்தார். பின்னர் அவரது கார் ஆயுதப்படைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் நேற்று இரவு 9 மணியளவில் போலீசார் பாதுகாப்புடன் திருவாலங்காடு காவல் நிலையத்துக்கு ஏடிஜிபி ஜெயராமன் அழைத்து வரப்பட்டார். அவர் மீது ஆள் கடத்தல், குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுடன் தொடர்பு உள்பட 3 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

விசாரணைக்குப் பிறகு திருத்தணி குற்றவியல் நடுவர் நீதிபதி வெங்கடேசன் முன்னிலையில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

# தமிழகத்தில் இளங்கலை மருத்துவம், பல் மருத்துவ படிப்புகளுக்கு 32,000 விண்ணப்பங்கள்: அமைச்சர் தகவல்

சென்னை, ஜூன் 18

தமிழகத்தில் இளங்கலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகளுக்கு 32,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது என அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார். சென்னை, தேனாம்பேட்டை, டிஎம்எஸ் வளாகத்தில் உள்ள 108 சேவை மையத்தில் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு மனநல ஆலோசனை வழங்கும் திட்டத்தை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்து பார்வையிட்டார். பிறகு அவர் நிருபர்களிடம் கூறியதாவது: திமுக அரசு பொறுப்பேற்ற நாள் முதல் 104 மருத்துவ தகவல் மையம் தொடங்கி, நீட் தேர்வுகளில் தேர்ச்சி பெறாத மாணவ, மாணவிகளுக்கு மனநல ஆலோசனைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கியது. மனநல ஆலோசனைகள் வழங்குவது என்பதையும் கடந்து மாணவர்களுக்கு எதிர்கால கல்விக்கு என்னென்ன உதவிகள் தேவைப்படுகிறதோ, எதை படித்தால் வாய்ப்புகள் இருக்கிறது என்பது குறித்தான விளக்கங்கள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், இந்த ஆண்டு தமிழ்நாட்டில் நீட் தேர்வு எழுதிய மாணவர்கள் 1,35,715 பேர், இதில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் 76,181 பேர், தேர்ச்சி பெறாத மாணவர்கள் 59,534 பேர், முதல் கட்டமாக 80 மனநல ஆலோசகர்களை கொண்டு வழங்கப்படுகிறது.



தமிழ்நாட்டில் உள்ள 75 மருத்துவக்கல்லூரிகளிலும் இளங்கலை மருத்துவப் படிப்புகளுக்கான வாய்ப்பு 11,850 பேருக்கு மட்டுமே, மீதம் உள்ளவர்களுக்கு பல் மருத்துவம், நர்சிங், பாராமெடிக்கல் என்று ஏறத்தாழ 20,000க்கும் மேற்பட்ட படிப்புகளில் சேர வாய்ப்புகள் இருக்கிறது. இளங்கலை மருத்துவம் மற்றும் பல் மருத்துவ படிப்புகளுக்கான விண்ணப்பங்கள் பெறும் நடவடிக்கை தமிழகத்தில் தொடங்கப்பட்டு 32,000 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. ஒன்றிய அரசு அறிவித்த உடன் தமிழகத்தில் கலந்தாய்வு நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார். நிகழ்ச்சியில் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எழிலன் நாகநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் வினித், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் சங்குமணி, மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் ராஜமூர்த்தி மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.


# ரூ.80 கோடியில் பிரமாண்டமாக புனரமைப்பு வள்ளுவர் கோட்டத்தை முதல்வர் திறந்து வைக்கிறார்: வரும் 21ம் தேதி அல்லது 27ம் தேதி விழா நடத்த முடிவு

சென்னை, ஜூன் 18

ரூ.80 கோடியில் புனரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை வரும் 21 அல்லது 27ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உலக பொதுமறையான திருக்குறளை படைத்த வள்ளுவனுக்கு நினைவு சின்னம் இல்லையே என்ற ஏக்கத்தை போக்கும் விதமாக தமிழ்நாட்டில் தலைநகரான சென்னையில் நுங்கம்பாக்கம் – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பில், 5 ஏக்கர் பரப்பளவில் 1974ம் ஆண்டு முதல்வராக இருந்த கலைஞரால் அடிக்கல் நாட்டப்பட்டது. உலகமே வியக்கும் திருக்குறளை போன்று நினைவு சின்னமும் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தும் விதமாக திருவாரூர் ஆழித்தேரை மாதிரி வடிவமாக கொண்டு, பல்லவக்கலை சிற்ப வேலைபாடுகளுடன் 128 அடி உயரம் கொண்ட விண்ணை முட்டுவதை போன்று உணர்வை தரும் வகையிலாக கல்தேர் செதுக்கப்பட்டது. சிற்ப வேலைபாடுகளுடன், கல்லால் செதுக்கப்பட்ட சிற்பத்தேரில் திருவள்ளுவர் சிலை வைக்கப்பட்டுள்ளது. காந்தார கலை வடிவில் தோரண வாயிலும், திராவிட கட்டிடக் கலை பிரதிபலிக்கும் வகையில் கட்டப்பட்டது.

மேலும், இங்கு 3,000 பேர் அமரும் வகையிலான அரங்கமும், இந்த அரங்கத்தின் மேல் பகுதியில் குறள் மணிமாடம் ஒன்றும் உள்ளது. அதில் 1300 குறள்களும் கற்பலகைகளில் செதுக்கிப் பார்வைக்கு வைக்கப்பட்டது. கலைஞரின் நேரடி கண்காணிப்பில் சிற்பி கணபதியை கொண்டு அடிக்கல் நாட்டிய, அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1976ம் ஆண்டு வள்ளுவர் கோட்டம் அமைக்கப்பட்டு, சுற்றுலா தளமாக விளங்கி வந்தது. ஆனால் கடந்த ஆட்சியில் உரிய முறையில் பராமரிக்கப்படாததால், சிதிலமடைந்து தனது பொலிவை இழந்து மோசமான நிலையில் இருந்தது. இந்நிலையில், திமுக ஆட்சிக்கு வந்த பிறகு வள்ளுவர் கோட்டத்தின் நிலையை அறிந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் இதை புனரமைக்க முடிவெடுத்து ரூ.80 கோடி ஒதுக்கி உத்தரவிட்டார். இதை தொடர்ந்து கடந்த ஆண்டு ஜனவரி 18ம்தேதி முதல் விறு விறுப்பாக புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வந்தது. இதற்கான பணியில் 270 தொழிலாளர்கள் ஈடுபட்டு வந்தனர்.

ஓராண்டுக்கும் மேலாக நடைபெற்று வரும் புனரமைப்பு மேம்பாட்டு பணிகளில் கலையரங்கம், குறள் மணி மாட கூரை புனரமைப்பு, தரைகள் புதுப்பித்தல், குறள் மணி மாட ஓவியம் சீரமைத்தல், வளாக சுற்றுச் சுவர் புதுப்பித்தல், தூண்கள், நுழைவாயில் பகுதிகளில் சிற்ப வேலைபாடுகள், மாற்றுத் திறனாளிகள் நடைபாதை என புதிய வடிவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பிரமாண்டமாக மாற்றியமைக்கப்பட்டு வந்தது. அதன்படி பார்த்தால், வள்ளுவர் கோட்டத்தின் கலையரங்கின் மேற்கூரையில் வள்ளுவனின் பிரமாண்ட படம் அமைக்கப்பட்டுள்ளது. அதோடு திருவாரூர் ஆழித்தேரைகாண்பது இன்னும் வியப்பில் ஆழ்த்த கூடிய வகையில் உள்ளது. இதில் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு பிரத்தேயக மின் தூக்கி, பல நிலைவாகனநிறுத்துமிடம், உணவுக்கூடம், விற்பனை மையம்உ ள்ளது.



அதோடு கட்டுமானத்தில் சிறப்பு சேர்க்கும் விதமாக மழைநீர் வடிகால் வசதி, 2 லட்சம் கொள்ளளவு நீர் சேமிப்பு தொட்டி அமைத்தலும்,

சுற்றுலா பயணிகளை கவரும் விதமாக பேவர் பிளாக் பாதை அமைத்தல், ஆர்ஓ பிளான்ட் அமைத்தல், புல்வெளி அமைத்தல், செயற்கை நீரூற்று அமைத்தல், ஒளி ஒலி காட்சி அமைத்தல், கூட்ட அரங்கம் மற்றும் குறள்மணி மாடம் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் நடந்து வந்தது. மேலும், வள்ளுவர் கோட்டம் கம்பீரமாக தோற்றம் அளிக்கும் வகையில் பிரமாண்டமான தோரண வாயில் அமைக்கப்பட்டுள்ளது. வேகமாக நடைபெற்று வந்த இந்த பணிகள் அனைத்தும் தற்போது முடிவடைந்துள்ளது. இதனால் புனரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம் சென்னையில் நடுவில் கம்பீரமாக காணப்படுகிறது. வர்ணம் பூசுதல் உள்ளிட்ட இறுதி கட்ட பணிகள் தற்போது நடைபெற்று வரும் நிலையில், பொதுமக்கள் அதை கண்டுகளிக்கும் வகையில் புனரமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டத்தை திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான தேதியும் இறுதி செய்யப்பட்டுள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதன்படி, வரும் 21 அல்லது 27ம் தேதி ஆகிய தேதிகளில் ஏதாவது ஒரு தேதி இறுதி செய்யப்பட்டு அன்றைய தினம் திறக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அன்றைய தினம் முதல்வர் மு.க.ஸ்டாலின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வள்ளுவர் கோட்டத்தை திறந்து வைக்க உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அன்றைய தினம் பொதுமக்களின் பார்வைக்காக மீண்டும் வள்ளுவர் கோட்டம் திறப்பு விழா காண இருக்கிறது.

# எனது பெயரில் ரூ.500 கோடி சொத்து இருப்பதாக பாண்டு பத்திரத்தில் பெற்றோர் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்: ஜெகன் மூர்த்திக்கு இதில் என்ன சம்பந்தம் என்று எனக்கு தெரியவில்லை

சென்னை, ஜூன் 18

எனது பெயரில் ரூ.500 கோடி சொத்து இருக்கிறதா எனது பெற்றோர் என்னிடம் பாண்டு பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டனர். இந்த பிரச்னையில் ஜெகன் மூர்த்திக்கு என்ன சம்பந்தம் என்று எனக்கு தெரியவில்லை. தினமும் புதுசு புதுசா பிரச்னைகள் வருகிறது என காதல் திருமணம் செய்த விஜயா□ கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார். இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கமான காதலன் தனுஷை வீட்டிற்கு தெரியாமல் திருமணம் செய்து கொண்ட விஜயா□, திருமணத்துக்கு பிறகு அவரது பெற்றோரால் எதிர்கொண்டு வரும் பிரச்னைகள் குறித்து பேசியதாவது: என் பெயர் விஜயா□, தேனி மாவட்டம். நான் பிஎஸ்சி அக்ரிகல்சர் படித்து கொண்டிருந்தேன். நானும் தனுஷும் 4 ஆண்டுகளாக காதலித்து வந்தோம். வீட்டில் தெரிந்து விட்டது. இதனால் பிரச்னை ஆகிவிடுமோ என்று நான் விருப்பட்டு இவரை திருமணம் செய்து கொண்டேன். திருமணம் செய்த பிறகு எங்கள் பெற்றோருக்கு தெரிந்து விட்டது. இதனால் என்னிடம் எல்லாம் எழுதி வாங்கி கொண்டாங்க. பாண்டு பத்திரத்தில் கூட எழுதி வாங்கி கொண்டார்கள். இப்போது புதுசு புதுசா பிரச்னை வருகிறது. எனது பெயரில் ரூ.500 கோடி சொத்து இருக்கிறதா சொல்றாங்க. ஆனால் எனது பெயரில் அப்படி இருக்கிற மாதிரி தெரியவில்லை. எனது பெற்றோரின் சொத்துக்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எனக்கு எதுவும் வேண்டாம்.

எதிர்காலத்தில் பிரச்னை வந்தால் நான் உங்களிடம் வரமாட்டேன் என்று எழுதி கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். போலீஸ் என்னிடம் 3 முறை வாக்குமூலம் பெற்றனர். திரும்ப இப்போ புதுசு புதுசா பிரச்னை வருகிறது.

இதுக்கும் ஜெகன் மூர்த்திக்கும் என்ன சம்பந்தமும், என்ன லிங்க் என்று தெரியவில்லை. அவர் எப்படி புதுசா எங்கள் பிரச்னையில் உள்ளே வந்தார் என்று தெரியல. எங்களை நிம்மதியாக விட்டால் போதும். நான் படிக்கனும் என்றாலும் முடியல. என்னுடைய படிப்பு சான்றிதழ்களை வைத்து வேலைக்கு செல்லவாய்ப்பு இருக்கிறது. இந்த பிரச்னையால் நாங்கள் 3 மாதமாக வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டிற்குள்ளேயே முடங்கி இருக்கிறோம்.



நாங்கள் எவ்வளவு நாட்கள் தான் இப்படி இருக்க முடியும். நாங்கள் அடுத்து எதிர்காலத்தில் வேலைக்கு போகனும், எனது பெற்றோரிடம் நானே பேசினேன். எதுவும் பன்னாதீங்க. நடந்தது நடந்து போச்சு. என்னிடம் சாதாரணமாகத்தான் பேசினார்கள்.

ஓகே நீ சென்றுவிட்டாய். நாங்கள் ஒரு வரவேற்பு நிகழ்ச்சி மட்டும் வைத்து கொள்கிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் வரவேற்பு வைப்பதாக இருந்தாலும் பரவாயில்லை.

திருமணம் கூட திரும்ப செய்து கொள்ளவும் விருப்பமாக இருக்கிறோம் என்று 3 வாரத்திற்கு முன்பு தான் சொன்னேன். நான் எனது பெற்றோரிடம் கேட்டேன். இனி ஏதாவது செய்வீர்களா என்று. அதற்கு நாங்கள் அப்படி எல்லாம் பண்ணமாட்டோம் டா. நீ தான் வரமாட்டேன் என்று சொல்லிட்டியே என்று சொன்னாங்க. என்னை பொருத்த வரை நாங்கள் இணக்கமாக போக வேண்டும். எனது அப்பா... எனக்கு அடுத்து எனது அண்ணா, எங்கள் அப்பாவை சார்ந்து தான் இருக்கிறார். என்னுடைய எதிர்காலம் இப்படி ஆகிவிட்டதே என்றாலும், எனது அண்ணன் எதிர்காலம் நல்லா இருக்கனும்... அவங்களும் படித்துக் கொண்டு இருக்கிறார்கள். திருணத்திற்கு எல்லா பெற்றோர்களும் எதிர்ப்பு தெரிவிப்பது இயல்புதான். நாங்கள் வீட்டில் மாட்டிக் கொண்டோம். அந்த ஒரு விஷயத்தினால் நான் வீட்டைவிட்டு வெளியே வந்து விட்டேன். சிறுவனை கடத்திய பிரச்னைக்கு பிறகு யாரும் என்னிடம் எனது வீட்டில் இருந்து பேசவில்லை. நாங்கள் எப்படி காதலித்தோம். நான் எப்படி அங்கிருந்து வந்தேன். எத்தனை நாட்கள் பழகினோம் என்று போலீசார் கேட்டார்கள். இதோடு நாங்கள் 4 முறை எழுதி கொடுத்துள்ளோம். ஏன் எங்களிடம் இப்படி திரும்ப திரும்ப வாக்குமூலம் கேட்டு கொண்டு இருக்காங்க என்று தெரியவில்லை.

இவ்வாறு விஜயா தெரிவித்துள்ளார்.

# மருத்துவர்கள் நியமனம்: திமுக அரசு எப்போது கவனம் செலுத்தும்? நயினார் நாகேந்திரன் கேள்வி



சென்னை, ஜூன் 18

பாஜக மாநிலத் தலைவர் நயினார்நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது;

போதிய மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் திருப்பூர் மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் தூய்மை பணியாளரே சிகிச்சை அளித்த அவலம் நிகழ்ந்துள்ளதாக வெளிவந்துள்ளதகவல்கள்அதிர்ச்சியளிக்கின்றன. தமிழக அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்பற்றாக்குறையால் நிகழும் மரணங்கள் தொடர்கதையாகி, தற்போது வழக்கமான பெட்டி செய்தியாகிவிட்ட நிலையில், மருத்துவர்கள் நியமனம் மீது எப்போதுதான் கவனம் செலுத்தும் திமுக அரசு?

உயிரைப் பறிக்கும் மரணக் கூடங்களாகவும், புகார்களின் புகலிடமாகவும் அரசு மருத்துவமனைகளை மாற்றியமைத்து விட்டு "உலகமே பாராட்டும் மருத்துவக் கட்டமைப்பு இது" என்று திராவிட மாடல் அரசு விளம்பரம் செய்வது அநியாயம். இது போன்ற நிகழ்வுகள் குறித்து கேள்வி கேட்கும் போதெல்லாம் எதோ ஒரு எண்களைக் கூறி, "இதோ நியமனம், அதோ நியமனம்" என வார்த்தை ஜாலம் செய்வதைத் தவிர்த்து, ஜனங்களின் வாழ்க்கையைக் காப்பாற்றும் எண்ணத்தோடு செயல்பட்டு, காலி மருத்துவப் பணியிடங்களை நிரப்ப வேண்டும் எனசுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்களை வலியுறுத்துகிறேன்.

"நாடு போற்றும் நல்லாட்சி" என்று பெருமிதம் கொள்ளும் முதல்வர் மு.க.ஸ்டாலின், முதலில் மக்கள் நலனைக் காக்கும் அரசு மருத்துவமனைகளின் அடிப்படை வசதிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# பாபநாசம் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 5 அடி உயர்வு



நெல்லை, ஜூன் 18

தமிழகத்தில் தென் மேற்கு பருவமழை பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லை, தென்காசி மாவட்டங்களில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தது. நேற்றும் மலைப்பகுதியில் கனமழை கொட்டியது. நெல்லை மாநகர பகுதியில் நேற்று பகல் முழுவதும் வானம் மேகமூட்டமாக காட்சி அளித்தது. மதியம் 2 மணியளவில் சிறிது நேரம் மழை பெய்தது. டவுன், சந்திப்பு, என்.ஜி.ஓ. காலனி, கே.டி.சி. நகர், மேலப்பாளையம், தச்சநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

மேற்கு தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. நெல்லை மாவட்டத்தின் பிரதான அணையான 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் காரையாறு அணை நீர்மட்டம் நேற்று மேலும் 5 அடி உயர்ந்து 130.20 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, வினாடிக்கு 5,223 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்துபாசனத்துக்கு 1,400 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனுடன் இணைந்த சேர்வலாறு அணை நீர்மட்டம் 7 அடி உயர்ந்து 142.12 அடியாக உள்ளது.

118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 94 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வினாடிக்கு 619 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு 45 கன அடியில் இருந்து 75 கன அடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

## தென்காசி அணைகள்

தென்காசி மாவட்டத்தில் உள்ள ராமநதி, குண்டாறு அணைகள் ஏற்கனவே நிரம்பி விட்டதால், அணைகளுக்கு வருகிற தண்ணீர் அப்படியே உபரிநீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. 85 அடி உயரம் கொண்டகடனாநதி அணை நீர்மட்டம் மேலும் 5 அடி உயர்ந்து 75 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 691 கன அடியாக அதிகரித்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு 100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

72 அடி உயரம் கொண்ட கருப்பாநதி அணை நீர்மட்டம் 67 அடியாக உள்ளது. 132 அடி உயரம் கொண்ட அடவிநயினார் அணை நீர்மட்டம் 3¼ அடி உயர்ந்து 112 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து 117 கன அடியாக அதிகரித்து உள்ளது.

மழை அளவு நெல்லை, தென்காசி மாவட்டங்களில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு: பாபநாசம் 17, சேர்வலாறு 6, மணிமுத்தாறு 1, கொடுமுடியாறு 11, நம்பியாறு 5, சேரன்மாதேவி 1, நாங்குநேரி 2, ராதாபுரம் 4, களக்காடு 1, மாஞ்சோலை 22, காக்காச்சி 30, நாலுமுக்கு 45, ஊத்து 38.

கடனா 10, ராமநதி 12, கருப்பாநதி 7, குண்டாறு 18, அடவிநயினார் 36, செங்கோட்டை 13, சிவகிரி 3.

# கூட்டணி கட்சிகளுக்கு தி.மு.க. தொகுதிகளை குறைத்து கொடுக்கமாட்டார்கள்: செல்வப்பெருந்தகை நம்பிக்கை



சென்னை, ஜூன் 18

சென்னை சத்தியமூர்த்தி பவனில் நேற்று, அகில இந்திய அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் பணியாளர் காங்கிரசின் மாநில மாநாடு நடந்தது.

மாநாட்டுக்கு, அமைப்பின் மாநில தலைவர் மகேஷ்வரன் தலைமை தாங்கினார். அகில இந்திய அமைப்புசாரா தொழிலாளர்கள் மற்றும் பணியாளர் காங்கிரஸ் தேசிய தலைவர் உதித்ராஜ் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் தலைவர் கே.வி.தங்கபாலு, விஷ்ணு பிரசாத் எம்.பி. உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பின்னர், செய்தியாளர்கள் சந்திப்பில் செல்வப்பெருந்தகை கூறியதாவது:

புதிய கல்வி கொள்கையை ஏற்றுக்கொண்டால் தான் தமிழகத்திற்கு நிதி தருவோம் என மத்திய அரசு கூறுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது. நடப்பாண்டில் தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்க தமிழக அரசு உத்திரவாதம் தர வேண்டும். மக்கள் தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு தள்ளிப்போடக்கூடாது. அடுத்த ஆண்டு தொடங்குவோம் என்று கூறுவது ஏமாற்று வேலை.

சட்டப்பேரவை தேர்தல் பணிகளை தொடங்கி விட்டோம். இந்தியாகூட்டணியை பொருத்தவரையில் தமிழ்நாட்டில் கூட்டணியை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தான் தீர்மானிக்கிறார். இந்தியா கூட்டணிக்கு தே.மு.தி.க. மட்டுமல்ல யார் வந்தாலும் வரவேற்போம். நாங்கள் தேசிய கட்சி என்பதால் கூடுதல் இடங்கள் குறித்து அகில இந்திய தலைமை தான் முடிவு செய்யும்.

காங்கிரஸ் கட்சியை பொருத்தவரையில் 234 தொகுதிகளை கொடுத்தாலும் அதை விரும்பி ஏற்றுக்கொள்வோம். எங்கள் கூட்டணியில் ஒரு செங்கலைக் கூட யாராலும் எடுக்க முடியாது. இந்தியா கூட்டணில் இணைவதற்கே பெரும்பாலான கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளது. சட்டப்பேரவை தேர்தலில் கூட்டணி கட்சிகளுக்கு தி.மு.க. தொகுதிகளை குறைத்து கொடுக்கமாட்டார்கள் என நம்புகிறோம்.

தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதிகளில் 90 சதவீதம் நிறைவேற்றியுள்ளார்கள். அரசியலுக்காக யார் எதை வேண்டுமானாலும் பேசலாம். அதே நேரத்தில் தேர்தல் அறிக்கையில் அறிவிக்காத திட்டங்களை கூட நிறைவேற்றியுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

# விஷம் குடித்து வந்து வகுப்பறையில் மயங்கிய 2 மாணவிகள்.. காரணம் என்ன..?



மதுரை ஜூன் 18

மதுரைஅருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 15 வயது மாணவிகள் இரண்டு பேர், 10ம் வகுப்பு மற்றும் 9 வகுப்பு படித்து வந்தனர். இவர்கள் இருவரும் தோழிகள் ஆவர். இருவரும் பள்ளிக்கு செல்ல விருப்பம் இல்லாமல் இருந்து வந்ததாக கூறப்படுகிறது. ஆனால் இவர்களின் பெற்றோர் இருவரையும் வற்புறுத்தி பள்ளிக்கு அனுப்பி வைத்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று காலையில் வழக்கம்போல் 2 மாணவிகளும் பள்ளிக்கு சென்றனர். செல்லும் வழியில் ஒரு கடையில் எறும்பு பொடி வாங்கி, தண்ணீரில் கலந்து குடித்ததாக தெரிகிறது. பின்னர் இருவரும் தங்கள் வகுப்பறைகளுக்கு சென்றனர். சிறிது நேரத்தில் 2 மாணவிகளுக்கும் மயக்கம் ஏற்பட்டது. இருவரும் தங்கள் வகுப்பறைகளில் மயங்கி விழுந்தனர். இதைப்பார்த்த சக மாணவிகள் அதிர்ச்சி அடைந்து, உடனடியாக ஆசிரியர்களுக்கு தகவல் தெரிவித்தனர். மேலும் பெற்றோருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் 2 மாணவிகளும் உடனடியாக விருதுநகர்அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பள்ளிக்கு செல்ல பெற்றோர் வற்புறுத்தியதால் விஷம் குடித்துவிட்டு வந்து பள்ளி வகுப்பறையில் மாணவிகள் மயங்கி விழுந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# பண்ருட்டியில் கொடூரம்.. 80 வயது மூதாட்டி கூட்டு பாலியல் பலாத்காரம்



பண்ருட்டி, ஜுன் 18

கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்தவர் 80 வயது மூதாட்டி. இவர் நேற்று மதியம் 3 மணி அளவில் இயற்கை உபாதை கழிப்பதற்காக அதே பகுதியில் உள்ள சவுக்கு தோப்புக்கு சென்றார். அப்போது அங்கு வந்த 4 பேர்கொண்ட கும்பல் திடீரென அந்த மூதாட்டியை தாக்கியது.

பின்னர் அவர்கள் மூதாட்டியை கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தனர். இதில் மூதாட்டியின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மூதாட்டி அணிந்திருந்த ¾ பவுன் நகையைபறித்துக்கொண்டு அங்கிருந்து அந்த கும்பல் தப்பி சென்றது.

இதற்கிடையே அந்த வழியாக சென்ற பொதுமக்கள், மூதாட்டி படுகாயத்துடன் கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். தொடர்ந்து அவர்கள், மூதாட்டியை மீட்டு சிகிச்சைக்காக சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவருக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இது குறித்த புகாரின் பேரில் பண்ருட்டி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். முதற்கட்ட விசாரணையில், மூதாட்டி சவுக்கு தோப்புக்கு செல்வதை நோட்டமிட்ட 35 வயது மதிக்கத்தக்க 4 வாலிபர்கள் அவரை பின்தொடர்ந்து சென்று கூட்டு பாலியல் பலாத்காரம் செய்ததும், பின்னர் அவர் அணிந்திருந்த ரூ.40 ஆயிரம் மதிப்புள்ள நகையை பறித்துச் சென்றதும் தெரியவந்தது.

தொடர்ந்து போலீசார், இதுகுறித்து விசாரணை நடத்தி வருவதுடன், தப்பி ஓடிய வாலிபர்களை தேடி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# பதவி உயர்வுகளில் சமூகநீதி பாதிப்பு ஓய்வுபெற்ற நீதிபதி அக்பர் தலைமையில் குழு: தமிழக அரசு அரசாணை

சென்னை, ஜூன் 18

சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின், உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் அரசு பணியாளர் தரவரிசை பட்டியல் மற்றும் பதவி உயர்வுகளில் சமூகநீதிக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்ய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்படும் என அறிவித்திருந்தார். இந்த அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக, ஓய்வு பெற்ற நீதிபதி ஜி.எம்.அக்பர் தலைமையில் குழு அமைத்த தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

இந்த அரசாணையில், ''சமூக நீதியை பாதுகாக்கவும் தேவையான சட்ட ரீதியிலான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை இந்த குழு அரசுக்கு சமர்ப்பிக்கும்.

ஓய்வு பெற்ற நீதிபதி அக்பர் தலைமையிலான இந்த குழு, சென்னையை தலைமை இடமாகக் கொண்டு செயல்படும். மேலும் குழு தனது ஆய்வுகளை முடித்து, சட்ட ரீதியிலான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 3 மாத காலத்திற்குள் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும் என காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது'' என்றும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த குழுவின் செயல்பாடுகளுக்கு தேவையான உதவிகளை செய்ய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களையும் நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கட்சியில் தொண்டர் இணைப்பு விழா அறிவித்தது 2000, இணைந்ததோ 200 பேர்: பாஜ தலைவர்கள் அதிருப்தி

அவனியாபுரம், ஜூன் 18

மதுரை அவனியாபுரம் அருகே வலையங்குளம் கருப்புசாமி கோயில் எதிரே உள்ள மைதானத்தில் பாஜ புதிய உறுப்பினர்கள் இணையும் விழா நடைபெற்றது. பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமை வகித்தார். ராமநாதபுரம் சமஸ்தான இளைய மன்னர் ஆதித்யா சேதுபதி உட்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாஜவில் இணைவார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் வெறும் 200க்கும் குறைவானவர்களே இணைந்தனர். மைதானத்தில் போடப்பட்டு இருந்த சேர்கள் காலியாக கிடந்தன.



ஆட்கள் அதிக அளவில் வராததால் தலைவர்கள் அதிருப்தியடைந்தனர்.

முன்னதாக இந்நிகழ்ச்சியை ஒட்டி பாஜகவினர் 4 வழிச்சாலை இருபுறமும் நடுவிலும் கொடியினை ஊன்றியிருந்தனர். பலத்த காற்று வீசியதால் கொடி கம்பங்கள் ரோட்டில் சாய்ந்தன. கொடி கம்பங்கள் நடு ரோட்டில் சாய்ந்ததால் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்பட்டது.

# அரசு மருத்துவமனையில் நோயாளிக்கு துப்புரவு தொழிலாளி சிகிச்சை?: சமூக வலைதளத்தில் வீடியோ வைரல்



உடுமலை, ஜூன் 18

அரசு மருத்துவமனையில் நோயாளிக்கு துப்புரவு தொழிலாளி சிகிச்சையளித்ததாக சமூக வலைத்தளங்களில்வீடியோ பரவிய நிலையில், போதிய மருத்துவ பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே மடத்துக்குளம் நால்ரோடு பகுதியில் அரசு மருத்துவமனை உள்ளது. தாலுகா மருத்துவமனையான இங்கு போதிய டாக்டர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் இல்லாததால் உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை பெறுவதில் சிரமம் ஏற்படுவதாக தொடர்ந்து புகார் தெரிவிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, இரவு நேரங்களில் அவசர சிகிச்சை கிடைப்பதில்லை என்று கூறப்படுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன், காலில் ஏற்பட்ட காயத்துக்கு சிகிச்சை பெறுவதற்காக மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு வாலிபர் ஒருவர் நள்ளிரவு சென்றுள்ளார்.

அப்போது, காயத்தை சுத்தம் செய்து கட்டுப்போடும் பணியை பெண் தூய்மை பணியாளர் ஒருவர் செய்ததாக கூறப்படுகிறது. இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது. இது பற்றி சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "ஏழை, எளியவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக நம்பியுள்ள அரசு மருத்துவமனையில் இதுபோன்ற சம்பவம் வேதனையளிப்பதாக உள்ளது. எனவே, அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள டாக்டர், நர்ஸ், இரவு காவலர் உள்ளிட்ட பணியிடங்களை நிரப்ப வேண்டும். விபத்து கால எலும்பு முறிவு உள்ளிட்ட அவசர சிகிச்சை வசதிகளை உருவாக்கி உயிரிழப்புகளை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றனர். இதுகுறித்து நர்சு ஒருவர் கூறுகையில், "காலில் ஏற்கனவே போடப்பட்டிருந்த கட்டை மட்டும் தான் துப்புரவு பணியாளர் கத்தரிக்கோல் மூலம் அகற்றினார். பின்னர் நாங்கள் தான் சுத்தப்படுத்தி, மருந்து போட்டு மீண்டும் கட்டு போட்டோம். துப்புரவு பணியாளர் பழைய கட்டை அகற்றுவதை மட்டும் வீடியோ எடுத்து பரப்பியுள்ளனர்" என்றார்.

# ரஜினி, விஜயகாந்தைவிட விஜய் பெரிய ஆளா? வேல்முருகன் கேள்வி



.தளி, ஜூன் 18

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டையில் தமிழக வாழ்வுரிமை கட்சியின் சார்பில் பொதுக் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இதில் வேல்முருகன் பேசியதாவது:

கலைஞர் ஆட்சியில் போராடி வாதாடி இன்றைக்கு 36 மெடிக்கல் காலேஜ் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதனை கொண்டு வந்தவன் வேல்முருகன், கூத்தாடி என்றால் உங்களுக்கு குறைந்து விட்டது என்கிறீர்கள். கூத்து என்றால் எனது தமிழனின் மரபு வழி கலையாகும், அதில் என்ன உங்களுக்கு குறைச்சல். எந்த நடிகர்களாக இருந்தாலும் தமிழ் சமூகத்திற்கு ஆற்றிய பங்களிப்பு என்ன?

வேல்முருகன் ஆற்றிய பங்களிப்பு என்ன? ஒரே மேடையில் விவாதிக்க தயாராக இருக்கிறேன். போராளிகளை பற்றி போராளிகளிடம் மைக் நீட்டி கேளுங்கள்.அவர்களுக்கு போராளிகள் பற்றி தெரியாது. அவர்களின் உலகம் வேறு. எங்கள் அண்ணனை விமர்சித்து விட்டீர்கள் என்கிறார்கள்.

உங்கள் அண்ணன் மட்டுமல்ல இந்த நாட்டின் சூப்பர் ஸ்டார் என அழைக்கப்பட்ட ரஜினிகாந்த், விஜயகாந்த் போன்றோர் தவறு செய்த போது அதை தவறு என்று கூறியவன் நான். ரஜினி ரசிகர்கள், விஜயகாந்த் ரசிகர்களை விட நீங்கள் என்ன பெரிய ஆள்களா? இவர்கள்தான் மாணவர்களை ஊக்கப்படுத்துகிறார்களாம். இவர்கள்தான் பரிசுகளை கொடுக்கிறார்களாம்.

தமிழ்நாட்டில் துணை நடிகர் பாலா என்பவர் கதாநாயகன் அல்ல. தான் சம்பாதித்த பணத்தை மக்களுக்கு வீடுகள்கட்டி, ஆம்புலன்ஸ் வாங்க உதவி புரிந்து வருகிறார். அவர் சூட்டிங் நடத்துவதில்லை. ஷோ நடத்துவதில்லை. ராகவா லாரன்ஸ் தான் சம்பாதித்த பணத்தை எத்தனையோ முதியோர் இல்லங்கள், ஆசிரமங்களுக்கு வழங்கி வருகிறார்.

அவர் எப்போதும் சூட்டிங் நடத்தவில்லை ஷோ நடத்தவில்லை. அரசியலுக்கு வாங்க... மக்களோடு நில்லுங்கள். நீங்கள் எல்லாம் 10வது 12வது படிக்கும் மாணவர்களுக்கு பரிசு கொடுத்து வருகிறீர்கள். கடலூர் மாவட்டத்தில் ஏழை, எளிய மாணவர்கள் எதிர்கால இந்தியாவின் அப்துல்கலாம்களாக வரவேண்டும் என்பதற்காக ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஒரு பத்திரிகை இல்லாமல் ஒரு புகைப்படக்காரார் இல்லாமல் செல்பி எடுக்காமல் ஒரு கோடி ரூபாய் நிதியை அறிவித்து விஞ்ஞான கல்விக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு உதவியவன் நான்தான்.

இவ்வாறு அவர் கூறினார்.'

# மணிமுத்தாறு அருவியில் 3வது நாளாக குளிக்க தடை




நெல்லை, ஜூன் 18

தென்மேற்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்துவருகிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

நெல்லை மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் தொடர்ந்து கன மழை பெய்து வருவதால் வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள மணிமுத்தாறு அருவியில் தற்போது வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதனால் பாதுகாப்பு கருதி மணிமுத்தாறு அருவியில் குளிக்க 3வது நாளாக வனத்துறையினர் தடைவிதித்தனர். பல்வேறு மாவட்டங்களிலிருந்து மணிமுத்தாறு அருவிக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றமடைந்தனர்.

# ஜூலை 15 முதல் மகளிர் உரிமைத்தொகைக்கு விண்ணப்பிக்கலாம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின்




தஞ்சை, ஜூன் 18

தஞ்சை அரசு சரபோஜி கல்லூரியில் இன்று நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின் கலந்துகொண்டு பேசினார். தஞ்சை மாவட்டத்திற்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்ட அவர், நிகழ்வில் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான ஒரு முக்கிய அறிவிப்பையும் வெளியிட்டார். அவர் பேசுகையில், " மக்களின் குறைகளைத் தீர்க்க உங்கள் பகுதிகளிலேயே ஜூலை 15 தொடங்கி தமிழ்நாடு முழுவதும் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்கள் நடத்தப்படும். கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் விடுபட்ட தகுதியுள்ள பெண்கள் இந்த முகாம்களில் உங்களின் விண்ணப்ப ங்களை நீங்கள் நிச்சயமாக தரலாம். இப்படி நீங்கள் தரும் விண்ணப்பங்கள் மேல் 45 நாள்களுக்குள் முடிவெடுக்க ப்படும். ஜூலை இரண்டாவது வாரம் தொடங்கி அக்டோபர் மாதம் வரை இந்த முகாம்கள் நடக்கும்.இத்தனை துறைகள், சேவைகள், திட்டங்கள் இதில் எப்படி விண்ணப்பிப்பது? என்று நீங்கள் யோசிக்க வேண்டாம்.

உள்ளூர் அளவில் இதற்கான தன்னார்வலர்கள் உங்கள் வீடுதேடி வந்து, உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் பற்றி உங்களுக்கு விளக்குவார்கள். எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? என்னசான்று, ஆவணங்கள் எல்லாம் இணைக்க வேண்டும்? தகுதி வரம்பு என்ன? இப்படி தேவையான எல்லா தகவல்களும், வழிகாட்டுதல்களும் உங்கள் வீட்டிற்கே வந்து கொடுப்பார்கள்" என்று கூறினார்.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

18.6.2025

## பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு பறவைகள் படையெடுப்பு: வன ஆர்வலர்கள் மகிழ்ச்சி



சென்னை, ஜூன் 18

சென்னையில் உள்ள பள்ளிக்கரணை சதுப்பு நிலத்திற்கு கழுகுகள் படையெடுத்து வருகின்றன. கருப்பு பருந்து, கருப்பு தோள் பருந்து, மற்றும் ஷிக்ரா போன்ற பறவைகள் வானில் வட்டமிடுகின்றன. இவை கேரளாவிலிருந்து தென்மேற்கு பருவமழை தொடங்கியதும் வருகின்றன. இந்த கழுகுகளின் வருகை, சதுப்பு நிலத்தின் சூழலியல் மாற்றத்தை காட்டுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதத்தில் இவை வரத் தொடங்குகின்றன. ஆகஸ்ட் மாதத்தில் இவற்றின் எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும். இந்த ஆண்டு வழக்கத்தை விட அதிகமான கழுகுகள் வந்துள்ளன என்று சென்னை மாவட்ட வன அலுவலர் சரவணன் கூறினார்.

கேரளாவில் இருந்து கழுகுகள் தமிழகத்திற்கு வருவது 1940களில் இருந்து ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. வட கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கியதும் கழுகுகள் இடம் பெயர்கின்றன. ஆனால், தென் கேரளாவில் உள்ள கழுகுகள் மழையிலும் அங்கேயே தங்கி விடுகின்றன. இந்த ஆண்டு மே மாதத்தின் 3வது வாரத்தில் தென்மேற்கு பருவமழை கேரளாவை தாக்கியது. உடனே அங்கிருந்து பறவைகள் புறப்பட்டன.

தற்போது, பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச்சுற்றியுள்ள மரங்கள் மற்றும் திறந்தவெளிகளிலும் கழுகுகள் ஓய்வெடுப்பதைக் காணலாம். பருவமழை காலத்தில் கழுகுகள் அதிக அளவில் வருவதால், பறவை ஆர்வலர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## புத்தாக்க பயிற்சிக்கான ஊக்க தொகையை உயர்த்தி வழங்க கோரிக்கை



சென்னை, ஜூன் 18

அரசு கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தில் புத்தாக்கபயிற்சி நடத்தப்பட்டு வருகிறது.

பயிற்சிக்கு வருபவர்களுக்கு ஒரு நாளைக்கு 250 ரூபாய் வீதம் 6 நாட்களுக்கு1500ரூபாய்வழங்கப்படுகிறது.ஒருநாளைக்கு வழங்கப்படுகின்ற தொகை 250 ரூபாயினை 500 ரூபாயாக உயர்ந்தி தர வேண்டும் என தமிழ்நாடு அனைத்து அரசுக் கல்லூரி பல்கலைக் கழக தகுதி கவுரவ விரிவுரையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## இன்றைய ராசி பலன்கள் (18.6.2025)

மேஷம்: உழைப்பிற்கு TODAY நல்ல பரிசு கிடைக்கும். வேலை வாய்ப்பு தேடுவோருக்கு சிறந்த வாய்ப்பு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

ரிஷபம்: நிதிநிலைசீராகும்.பழையகடன்கள் தீர்க்கப்படும். வீட்டில் சில சின்ன சிக்கல்கள் இருந்தாலும் நீடிக்காது.

மிதுனம்: புதிய முயற்சியில் வெற்றி. வியாபாரத்தில் லாபம். பழைய நண்பரிடமிருந்து நல்ல செய்தி வரும்.

கடகம்: உடல் ஆரோக்கியத்தில் சிறு கவலை. மன அழுத்தம் இருக்கும். ஆனாலும் குடும்ப ஆதரவு கிடைக்கும்.

சிம்மம்: வாழ்க்கையில் முன்னேற்றம். அலுவலகத்தில் உங்கள் கருத்து மதிக்கப்படும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும்.

கன்னி: அறிவுக் கூர்மை அதிகரிக்கும். போட்டிப் பரீட்சை எழுதுபவர்களுக்கு சாதகமான நாள். உணவில் கவனம் தேவை.

துலாம்: வீட்டு வேலைகளில் பிஸியாக இருப்பீர்கள். உறவுகளில் அன்பும் பாசமும் அதிகரிக்கும். வீண் சண்டைகளை தவிர்க்கவும்.

விருச்சிகம்: சிறந்த வாய்ப்பு காத்திருக்கிறது. தொழிலில் லாபம். பழைய சிக்கல்கள் தீரும். நண்பர்களுடன் சந்தோஷமான சந்திப்பு.

தனுசு: புதிய திட்டங்களை தொடங்க நல்ல நேரம். மனைவி/கணவருடன் நேரம் செலவிடுவதால் உறவு மேம்படும்.

மகரம்: செயல்களில் சீரும் சுகமும் இருக்கும். நிலம் தொடர்பான விஷயங்களில் சாதகமான தீர்வு. பண வரவு உயரும்.

கும்பம்: சிறு சிக்கல்கள் இருந்தாலும், நீங்கள் புத்திசாலித்தனமாக தீர்வுகளை காண்பீர்கள். நண்பர்களிடம் உதவி கிடைக்கும்.

மீனம்: இனிமையான நாள். கல்யாணம் தொடர்பான விஷயங்களில் முன்னேற்றம். பயணம் ஒருவேளை ஏற்படலாம்.

## பரதாமியில் மாங்காய்களை தரையில் கொட்டி விவசாயிகள் மறியல் போராட்டம்



வேலூர், ஜூன் 18

வேலூர் மாவட்டம் ஆந்திர எல்லைப் பகுதியான பரதாமியில் மாங்காய்களை தரையில் கொட்டி விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். டன் ஒன்றுக்கு ரூ.4000 மானியமாக வழங்க வேண்டும், குறைந்தபட்ச ஆதார விலையாக டன் ஒன்றுக்கு ரூ.15,000 நிர்ணயித்து வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மோடி தலைமையிலான மத்திய அரசு; கீழடி அகழாய்வு அறிக்கையை வெளியிட வேண்டும்; பி.வில்சன் எம்பி வலியுறுத்தல்



சென்னை, ஜூன் 18

திமுகமாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன், தனது சமூக வலைதளப் பதிவில் வெளியிட்ட அறிக்கையில், ஆர் எஸ் எஸ் சித்தாந்தத்தால் இயக்கப்படும் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய பாஜ அரசு, கீழடியின் முக்கியத்துவத்தை புதைத்துவிட தீர்மானித்தது போல் தோன்றுகிறது. ஜனவரி 2023ல் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் கீழடி அகழாய்வு குறித்து விரிவானஇறுதிஅறிக்கையைசமர்ப்பித்தார்.இருப்பினும், இந்த அறிக்கை தற்போது வரை பொதுவெளியில் வெளியிடப்படவில்லை.

ஏனெனில்,அந்தஅறிக்கைஆர்.எஸ்.எஸ்.சித்தாந்தத்தால் இயக்கப்படும் மத்திய பாஜ அரசினால் புனையப்பட்ட கட்டுக்கதைகளை தோலுரிக்கிறது. இதற்காக கீழடி தொடர்பான அறிவியல் ஆய்வுகளுக்கு நேரம் தேவைப்படுவதால் தாமதமாகிறது என்று கூறி வருகிறது.

ஒன்றிய அரசு உண்மையாகவே கூட்டாட்சி முறையை மதிக்கிறதானால், கீழடி இந்தியாவின் பெருமையாகக் கொண்டாடப்பட வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக, சமஸ்கிருதம் தெற்கே வருவதற்கு முன்பே தமிழ் நிலப்பரப்பில் எழுத்து, தொழில் மற்றும் வளமான கலாசாரம் இருந்ததை கீழடி நிரூபிப்பதால், அவர்கள் அதைத் தடுத்து, தாமதப்படுத்தி, கேள்விக்குள்ளாக்குகின்றனர். இந்த தாமதம் தற்செயலானது அல்ல என்று வில்சன் குறிப்பிட்டுள்ளார்.

## படகு கடலில் மூழ்கி கடலூர் மீனவர் உயிரிழப்பு



ஆந்திரா, ஜூன் 18

நெல்லூருக்கு செயற்கை பவளப்பாறைகளை இறக்கச் சென்ற படகு கடலில் மூழ்கி கடலூர் மீனவர் உயிரிழந்தார். கடலூர் துறைமுகத்தில் இருந்து நெல்லூருக்கு பவளப் பாறைகளை இறக்கி விட்டு திரும்பி வந்த போது விபத்து ஏற்பட்டது. படகில் விரிசல் ஏற்பட்டு கடலில் மூழ்கிய நிலையில் 6 பேர் மீட்பு; கடலூர் மீனவர் மாணிக்கசாமி உயிரிழந்தார்.

## சீமான் இறக்கியது கள்ளா? பதநீரா? - தூத்துக்குடி எஸ்பி விசாரணை



தூத்துக்குடி, ஜூன் 18

சீமான் பனைமரம் ஏறி இறக்கியது கள்ளா? அல்லது பதநீரா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட எஸ்.பி. தெரிவித்துள்ளார்.

சீமான் இறக்கியது கள் என்பது உறுதியானால் அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழையில் தடையை மீறி கள் இறக்கும் போராட்டத்தில் ஈடுபட்டதாக சீமான் அறிவித்திருந்தார்.

## 86 பெண் காவலர்களை விரும்பிய இடத்திற்கு பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவு

சென்னை, ஜூன் 18

86 பெண் காவலர்களை விரும்பிய இடத்திற்கு பணியிட மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. முதல்வர் உத்தரவுப்படி பெண் காவலர்களின் நலனை கருத்தில் கொண்டு, அவர்கள் விரும்பிய மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

## திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு தொடர்பான வழக்கில் அறநிலையத்துறை பதில்தர ஐகோர்ட் கிளை ஆணை

தூத்துக்குடி, ஜூன் 18

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு தொடர்பான வழக்கில் அறநிலையத்துறை பதில்தர ஐகோர்ட் கிளை ஆணையிட்டுள்ளது.

திருச்செந்தூர் கோயில் குடமுழுக்கு நேரத்தை மாற்றக் கோரி ஐகோர்ட் மதுரை கிளையில் சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கோயில் பழக்கவழக்கம், மரபுகளை பின்பற்றி குடமுழுக்கு நேரம் முடிவுசெய்யப்பட்டுள்ளதா?எனஐகோர்ட் கிளை கேள்வி எழுப்பியுள்ளது.

## "நல்ல படங்களை ஆண்டவன் சோதிப்பான், ஆனால்..." இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ்



தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர் கார்த்திக் சுப்புராஜ். இவரது இயக்கத்தில் சூர்யா நடிப்பில் கடந்த 1ம் தேதி வெளியான படம் 'ரெட்ரோ'. பூஜா ஹெக்டே கதாநாயகியாக நடித்துள்ள இப்படத்தில் ஜோஜு ஜார்ஜ், ஜெயராம், கருணாகரன் மற்றும் பலர் நடித்துள்ளனர். ரூ.70 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ள இப்படம் கலவையான விமர்சனங்களை பெற்று வருகிறது.

இதற்கிடையில், நேர்காணல் ஒன்றில் கலந்து கொண்ட இயக்குனர் கார்த்திக் சுப்பராஜ். தனது படங்களுக்கு வரும் விமர்சனங்கள் குறித்து பேசியுள்ளார். அதாவது, "திரைப்படங்கள் உங்களை எப்போதும் பாதிக்காது. ஒரு சிலர் மக்களை திரைப்படங்களுக்கு போகாமல் தடுப்பதை சமூக சேவையாக கருதுகிறார்கள். மது குடிப்பதை, சிகரெட் பிடிப்பதை தடுக்கலாம், படம் பார்ப்பதை ஏன் தடுக்க வேண்டும்? ரசிகர்களிடம் விட்டுவிடுங்கள் அவர்கள் முடிவு செய்யட்டும். நல்ல படங்களை ஆண்டவன் சோதிப்பான், ஆனால் கைவிட மாட்டான்" என்று தெரிவித்துள்ளார்.

## மூன்றரை மணி நேரமா.... பிரபாஸ் படத்தின் நீளம் குறித்த தகவலால் ரசிகர்கள் அதிர்ச்சி




பிரபாஸ் நடித்துள்ள "தி ராஜாசாப்" படத்தின் டீசர் உலகம் முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்று வருகிறது. மாருதி இயக்கியுள்ள இந்த ஹாரர் காமெடி திரைப்படம் டிசம்பர் 5ம் தேதி மிகப்பெரிய அளவில் வெளியாக உள்ளது.

டீசர் வெளியீட்டு விழாவில் பேசிய இயக்குனர் மாருதி, இப்படம் மூன்றரை மணி நேரம் நீளமாக இருக்கும் என்று கூறினார். இது ரசிகர்களை அதிர்ச்சியடைய செய்தது.

இந்நிலையில், படத்தின் நீளம் மூன்றரை மணி நேரம் என்று தவறாக கூறிவிட்டதாகவும், படம் சுமார் மூன்று மணி நேரம் நீளமாக இருக்கும் என்றும் இயக்குனர் தற்காலிக ரன் டைமை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் ரிலீஸ் தேதி நெருங்கும்போது சிறிய மாற்றங்கள் ஏற்படலாம்.

## அதற்கு பயந்துதான் திருமணம் செய்யவில்லை சல்மான் கான்



பாலிவுட் சினிமாவில் முன்னணி நடிகராக இருப்பவர் சல்மான் கான். இவரது நடிப்பில் கடந்த மார்ச் மாதம் சிக்கந்தர் படம் வெளியானது. இந்த படத்தினை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கினார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களையே பெற்றது.

அந்த படத்தை தொடர்ந்து அடுத்ததாக சல்மான்கான் ராணுவ அதிகாரியாக புதிய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இந்த படத்தை அபூர்வா லக்கியா இயக்க உள்ளார்.

இதற்கிடையில் நடிகர் சல்மான்கான் வயதாகியும் இன்னும் திருமணம் செய்யவில்லை. பல 100 கோடிக்கு மேல் சொத்துக்கள் இருந்தும் திருமண விஷயத்தில் அவர் ஆர்வம் காட்டவில்லை. இந்நிலையில் சல்மான்கான் 'தி கிரேட் இந்தியன்' நிகழ்ச்சியில் பங்கேற்றார். நிகழ்ச்சியில் பேசிய சல்மான்கான் தனக்கு இருந்த விவாகரத்து பயம் திருமணத்திற்கு ஒரு தடையாக இருப்பதாக பேசினார். இதனால் 59 வயதிலும் தனிமையில் இருக்க முடிவு செய்தது பற்றியும் நிகழ்ச்சியில் கூறி இருக்கிறார்.

## சென்னை சிட்டி கேங்ஸ்டர் படத்தின் டிரெய்லர் வெளியீடு

சென்னை 28, சரோஜா, கோவா படங்களில் நகைச்சுவை கதாப்பாத்திரங்களில் நடித்தவர் வைபவ். பின்னர், 'கப்பல், மேயாத மான்' போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்துள்ளார். இவரது நடிப்பில் சமீபத்தில் 'பெருசு' என்ற படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இதை தொடர்ந்து நடிகர் வைபவ், 'சென்னை சிட்டி கேங்ஸ்டர்ஸ்' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை விக்ரம் ராஜேஷ்வர் மற்றும் அருண் கேசவ் இணைந்து இயக்கியுள்ளனர். இப்படத்தில் அதுல்யா ரவி கதாநாயகியாக நடித்துள்ளார். நகைச்சுவை படமாக உருவாகி உள்ள இதில் மொட்ட ராஜேந்திரன், ஜான் விஜய், ரெடின் கிங்ஸ்லி, சுனில் ரெட்டி, ஆனந்த் ராஜ், இளவரசு உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

முழுக்க முழுக்க காமெடி நிறைந்த இப்படத்தின் டிரெய்லர் மற்றும் பாடல் சமீபத்தில் வெளியாகி வைரலாகின. இப்படம் வருகிற ஜூன் 20ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்தது. இப்படத்தின் டிரெய்லர் வெளியாகி உள்ளது. இந்த டிரெய்லரை பிரியாபவாணி சங்கர், அஸ்வத் மாரிமுத்து மற்றும் ஆர்யா உள்ளிட்டோர் வெளியிட்டுள்ளனர்.

## லோகேஷ் அபார பந்துவீச்சு.. திண்டுக்கல் அணியை வீழ்த்தி சேப்பாக் சூப்பர் கில்லீஸ் வெற்றி



சேலத்தில் நடந்து வரும் டி.என்.பி.எல். கிரிக்கெட்டில் இன்று நடைபெற்ற 14வது லீக் ஆட்டத்தில் சேப்பாக் சூப்பர் கில்லீஸ் திண்டுக்கல் டிராகன்ஸ் அணிகள் விளையாடின. மழை காரணமாக தாமதமாக தொடங்கிய இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற திண்டுக்கல் அணியின் கேப்டன் அஸ்வின் பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்ய களமிறங்கிய சேப்பாக் சூப்பர் கில்லீசுக்குதொடக்கம்சரியாகஅமையவில்லை.தொடக்கஆட்டக்காரர்கள் ஆனஆஷிக்12ரன்களிலும்,மோகித்ஹரிஹரன்4ரன்களிலும்ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

அடுத்து வந்த கேப்டன் பாபா அபராஜித் ஒருபுறம் நிலைத்து விளையாட மறுமுனையில் ஜெகதீசன் (11 ரன்கள்), விஜய் சங்கர் (26 ரன்கள்), ஸ்வப்னில் சிங் (20 ரன்கள்) நீண்ட நேரம் தாக்கு பிடிக்கவில்லை. விரைவில் ஆட்டமிழந்தனர். பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அபராஜித் 56 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இறுதி கட்டத்தில் சுனில் கிருஷ்ணா (32 ரன்கள்) அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணி வலுவான நிலையை எட்ட உதவினார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த சேப்பாக் சூப்பர் கில்லீஸ் 180 ரன்கள் அடித்தது. திண்டுக்கல் தரப்பில் அதிகபட்சமாக வருண் சக்ரவர்த்தி 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 181 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி திண்டுக்கல் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் சிவம் சிங் 13 ரன்னில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த பாபா இந்திரஜித்துடன் அஸ்வின் ஜோடி சேர்ந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடி அரைசதம் கடந்தனர்.

இவர்களில் அஸ்வின் 67 ரன்னிலும், பாபா இந்திரஜித் 73 ரன்னிலும் ஆட்டமிழந்தனர். அத்துடன் அணியை வெற்றிப்பாதைக்கு அருகில் அழைத்துச்சென்றனர். ஒரு கட்டத்தில் திண்டுக்கல் அணி எளிதில் வெற்றிபெற்றுவிடும் என்ற நிலையில் இருந்தது. ஆனால் அடுத்து வந்த பேட்ஸ்மேன்கள் ஒற்றை இலக்க ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இறுதியில் திண்டுக்கல் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 172 ரன்களே எடுக்க முடிந்தது. இதன் மூலம் சேப்பாக் சூப்பர்கில்லீஸ் அணி 8 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. சேப்பாக் அணி தரப்பில் லோகேஷ் 2 ஓவர்கள் வீசி 13 ரன்கள் விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றி அசத்தினார்.

## திண்டுக்கல் அணி பந்தை சேதப்படுத்தியதா..? தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் விளக்கம்



8 அணிகள் இடையிலான 9வது டி.என்.பி.எல். டி20 கிரிக்கெட் தொடர் கோவையில் கடந்த 5ந் தேதி தொடங்கியது. இதில் ஒவ்வொரு அணியும், மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேஆப் சுற்றுக்கு முன்னேறும். இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் கோவையில் நடந்து முடிந்தன. இதனையடுத்து 2வது கட்ட லீக் ஆட்டங்கள் சேலத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் கடந்த 14ந்தேதி சேலத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் மதுரை பாந்தர்சை தோற்கடித்தது.

இந்தப் போட்டியில் அஸ்வின் தலைமையிலான திண்டுக்கல் டிராகன்ஸ் அணி ரசாயனம் தடவப்பட்ட துண்டுகளை பயன்படுத்தி பந்தை சேதப்படுத்தியதாக மதுரை பாந்தர்ஸ் அணி தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்திடம் புகார் அளித்தது.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து விளக்கமளித்துள்ள தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம், "பந்தை சேதப்படுத்தியதற்கான ஆதாரம் இல்லை. சந்தேகத்திற்குரிய துண்டுகள் இரு அணிகளுக்கும் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத்தால் வழங்கப்பட்டவை. நடுவர்களால் பந்து முழுவதுமாக கண்காணிக்கப்பட்டது. ஊகத்தின் அடிப்படையிலேயே குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு உள்ளன. உரிய ஆதாரங்கள் இருந்தால் தனி ஆணையத்திடம் நாளை பிற்பகல் 3 மணிக்குள் ஆதாரங்களைசமர்பிக்கலாம்" என்றுகூறியுள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.